ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/10 - 2026 පෙබරවාරි මස 10 වැනි අඟහරුවාදා - 2026.02.10

*2475/10 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 109910 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 278, ஹைலெவல் வீதி, மஹரகம மற்றும் சத்தார பில்டிஹங், 1/1/3, மஹமேகவத்தை வீதி, மஹரகம இல் அமைந்துள்ளதுமான லங்கா நிபோன் பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் (பிறைவேட்) லிமிடெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2022, யூன் 27 ஆந் திகதிய 2286/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் “மென்பொருள் மற்றும் இளங்கலை விஞ்ஞானமானி (கௌரவப்பட்டம்)” என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக

இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. லங்கா நிபோன் பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் (பிறைவேட்) லிமிடெட் ஆனது, தகவல் தொழினுட்பத்தில் இளமாணி (இலங்கை தகைமை கடடமைப்பு மட்டம் 5) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ;-

   (i) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

2. லங்கா நிபோன் பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் (பிறைவேட்) லிமிடெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| தகவல் தொழினுட்பத்தில் இளமாணி | (பீஐறீ) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2026, சனவரி 26.

EOG 02 - 0081

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது